15.07.2025

அ.வ.எண்.132/2022

<u>வா.சா.3 ஜெயபிரகாஷ் குறுக்கு விசாரணை</u>

1. தாவாசொத்தின் சர்வே எண் 68 ஆகும். தாவா சொத்தின் 4 எல்லைகள் தெரியுமா என்றால் வடக்கு பக்கம் சாலை, கிழக்கு பக்கம் சாலை, தெற்கு பக்கம் துரைபாபு வீடு, மேற்கு பக்கம் பிரேமாவின் சொத்து ஆகும். தாவா சொத்திற்கு இன்றைய தேதிவரை யார் பெயரிலும் பட்டா வழங்கப்படவில்லை என்றால் கிராமநத்தமாக உள்ளது. வருவாய் ஆவணங்கள் அனைத்திலும் காலி நத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதியின் பெயரில் தாவா சொத்தில் பட்டா எந்த காலத்திலும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எந்த சொத்திற்கு மின் இணைப்பு கேட்கிறார்களோ அந்த சொத்திற்கு வருவாய் ஆவணங்கள இல்லாமல் மின் இணைப்பு கொடுக்க கூடாது என்று அரசாங்கதின் தடை உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. வாதி மின் இணைப்பு கேட்டு மனு கொடுத்தது எதற்காக நிலுவையில் உள்ளது என்றால் பட்டா இல்லாததால் மின் இணைப்பு கொடுக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். வாதி பெயரில் பட்டா இல்லாததால்தான் மின் இணைப்பு துறையிலிருந்து மின் இணைப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்க ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.